සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

බුද්ධ ධර්මය I, II
**பௌத்தம் I, II**
Buddhism I, II

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

## பௌத்தம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. சித்தார்த்த இளவரசன் பிறந்த கோசல நாட்டு சாக்கிய தேசத்தின் தலைநகராவது,
 (1) தேவ்தஹ (2) ஸாவத்தி (3) கபிலவஸ்து (4) கிம்பல்வத்

2. சித்தார்த்த இளவரசன் எதிர்காலத்தில் புத்தராவார் என்று முதன்முதலில் எதிர்வுகூறியவர்,
 (1) அஸித சந்நியாசி (2) ஆலார காலாம சந்நியாசி
 (3) கொண்டக்ஞ பிராமணர் (4) உத்தகராமபுத்த சந்நியாசி

3. சித்தார்த்த இளவரசன் பிறந்து ஐந்தாம் மாதத்தின் பின்னர் இடம்பெற்ற உழவு விழாவில் அவர் மேற்கொண்ட தியானம் (பாவனா) என்பது,
 (1) மைத்ரீ பாவனா (2) ஆனாபானஸதி பாவனா
 (3) அசுப பாவனா (4) மரணானுஸ்ஸதி பாவனா

4. கிருகஸ்த வாழ்க்கையைத் துறந்து சென்ற சித்தார்த்தர் ஆச்சாரியர்களைத் தேடிச் சென்றபோது வழி நடுவே அவர் சந்தித்தது,
 (1) கோசல மன்னனை ஆகும். (2) அஜாசத் மன்னனை ஆகும்.
 (3) பிம்பிசார மன்னனை ஆகும். (4) உதேனீ மன்னனை ஆகும்.

5. புத்தர் போதித்த நான்கு சீரிய உண்மையின் எட்டுவகை மார்க்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை விஞ்சி நிற்கும் போதனைகள் வேறு எந்தவொரு சமயத்திலும் இல்லை எனக் கூறியவர்,
 (1) எச். ஜீ. வேல்ஸ் (2) எட்வின் அர்னோல்ட்
 (3) ரீஸ் டேவிட்ஸ் (4) வில்லியம் கைகர்

6. புத்தர் புத்தத்துவம் அடைந்தபின் ஏழாவது வாரத்தைக் கழித்தது,
 (1) ருவன்கெயில் (2) அஜபால நுகருக அடியில்
 (3) முசலிந்த நாரஜ மரநிழலில் (4) ராஜாயதன கிரிபலு நுகருக அடியில்

7. புத்தர் தான் உணர்ந்தறிந்து கொண்ட தர்மம் ஆழமானதென்றும் துன்பத்தில் உழலும் சாதாரண மனிதருக்கு விளங்கிக்கொள்ள முடியாதது என்றும் யோசித்துக் கொண்டிருந்தபோது அவரை தர்மபோதனை செய்வதற்கு அழைத்தவர்,
 (1) கவம்பதீ மாணவக (2) ஹுஹுங்க பிராமணர்
 (3) கடீகார மகாபிரம்மம் (4) ஸஹம்பதி மகாபிரம்மம்

8. ஒரு நாளில் ஐந்து பகுதிகளாக பிரிக்கப்பட்ட காலங்களுள் புத்தர் தம்மிடம் வரும் உபாசகர், உபாசிகைகளுக்கு தம்ம போதனையை போதிப்பதற்காக, ஒதுக்கப்பட்ட காலத்தை எவ்வாறு அழைப்பர் ?
 (1) முற்பகல் (2) பிற்பகல் (3) விடியல் (4) மதியம்

[பக். 2 ஐப் பார்க்க

9. உருவெல காச்யப உள்ளிட்ட மூன்று சகோதரர்களுக்கு தர்ம அறிவைப் போதிப்பதற்காக அவர்கள் வாழ்ந்த இடத்திற்கு புத்தர் போயிருந்தார். இந்தக் கூட்டத்தினரை அழைக்கப் பயன்படுத்தப்படும் சரியான கூற்றாவது,
(1) உருவெல பிரதேச யட்டில (2) விசாலா நகரத்து ஆர்ஜிவக
(3) சேனானி நகர யட்டில (4) உருவெல பிரதேச நிகண்ட

10. புத்தரின் உருவப் பொலிவினால் கவரப்பட்டு அவரருகில் துறவியாக வாழ்ந்த பிக்கு,
(1) தர்மராம பெரியார் (2) வக்கலீ பெரியார்
(3) கக்குல பெரியார் (4) ஆனந்த பெரியார்

11. புத்தரிடத்து அனுமதி பெற்று இளம் பிராமணன் ஒருவர் சில மாதங்களுக்கு அவரது நடத்தைகளை அவதானித்து வந்தார். அவர்,
(1) பிரஹ்மாயு (2) சங்கீ (3) சோணதண்ட (4) அக்கோசக

12. தானம் செய்தல் முதலான புண்ணியச் செயல்கள் பாரமிதாவாக ஆவதற்கு வேண்டிய விடயங்களைக் **கொண்டிராத** விடையாவது,
(1) பேராசை எண்ணம், தவறான எண்ணம் என்பவற்றிலிருந்து விடுபட்டுச் செயலாற்றுதல்
(2) இரக்கம், உபாயம், திறமை, அறிவு ஆகியவற்றுடன் செயற்படல்
(3) தனிப்பட்ட இலாபம், பயன், கீர்த்தி, புகழ்ச்சி இவற்றை எதிர்பார்க்காது செயற்படல்
(4) தேவலோக, மனித உலக சுகம், செல்வங்களை எதிர்பார்த்து செயற்படல்

13. பாரமிதாவை நிறைவேற்றும் வகைக்கேற்ப சகல பாரமிதாக்களையும் மூன்று பிரிவாகப் பிரிப்பர். அதாவது,
(1) புது, பஸெபுது, மஹரஹத் (2) த்ருஷ்ணா, மான, திட்டி
(3) பாரமீ, உபபாரமீ, பரமத்த பாரமீ (4) ஸ்வார்த, பரார்த, உபயார்த

14. போதிசத்துவர் வீரய பாரமிதாவை நிறைவுசெய்த விதத்தைக் கூறும் ஜாதகக் கதையாவது,
(1) மகாதேவ ஜாதக (2) வண்ணுபத ஜாதக
(3) தேமிய ஜாதக (4) வட்டக ஜாதக

15. மகாசங்க (சங்கரத்ன)த்தின் பண்புகள் இடம்பெறும் இடத்தில் "வரவழைக்கும் பொழுது வேண்டியதான நான்கினை வழங்குவது சிறப்பானது" எனும் பண்பு இவ்வாறு கூறப்படுகின்றது,
(1) ஸாமீசிபடிபன்ன (2) ஆஹுணெய்ய
(3) பாகுணெய்ய (4) தக்கிணெய்ய

16. மும்மணிகளின் பண்புகள் பற்றி முறைப்படி தெரிந்து கொள்வதன் மூலம் உண்டாகும் திருப்தியை புத்த சமயத்தில் இவ்வாறு அழைப்பர்,
(1) பக்தி (2) அமூலிகா ஸத்தா
(3) ஆகாரவதீ ஸத்தா (4) பிரஸாத

17. தனிப்பட்ட ஒருவரின் உள்ளத்தில் எழுகின்ற சகல அசுத்தங்களையும் போக்குவதன் மூலம் உண்டாகும் ஞானத்தை புத்தமதத்தில் இவ்வாறு அழைப்பர்,
(1) ஆஸவக்கய ஞானம் (2) மார்க்க ஞானம்
(3) திப்பஸோத ஞானம் (4) சேதோபரிய ஞானம்

18. பல்வேறு போக்கில் செல்வதும், வேறுபடுவதும், சஞ்சலப்படுவதுமான மனதை ஒருமுகப்படுத்துவதற்கு உதவும் தியான (பாவனா)த்தை இவ்வாறு அழைப்பர்,
(1) சமத பாவனா (2) விதர்ஷனா பாவனா
(3) கமடஹன் பாவனா (4) த்யான பாவனா

19. "புட்டஸ்ஸ லொக தம்மெஹி-சித்தங் யஸ்ஸ ந கம்பதி" எனும் பாடலடியினால் விளக்கப்படுவதாவது,
(1) உலகத்தில் பற்றுடையவனாயிருத்தலாகாது.
(2) முரண்பாடுகளின்றி அமைதியாக வாழ்வது சிறப்பானது.
(3) அடலோக தர்மத்திலிருந்து தளம்பக் கூடாது.
(4) உள்ளத்தைக் களங்கமின்றி வைத்திருத்தல் வேண்டும்.

20. உள்ளத்தில் ஆறுதலில்லாத தன்மையையும் செய்த கெட்ட செயல்களையும் செய்யாத நல்ல செயல்களையுமிட்டு பச்சாத்தாபப்படும் இயல்பினை புத்தமதத்தில் இவ்வாறு கூறுவர்,
(1) வ்யாபாத (2) தீனமித்த (3) உத்தச்ச குக்குச்ச (4) விசிகிச்சா

[பக். 3 ஐப் பார்க்க

21. "அவன் என்னை ஏசினான்; என்னை அடித்தான்" என்றிவ்வாறாக நினைத்துக் கோபம் கொண்டிராதவரின் பகைமை சமாதானப்படுத்தப்படுகிறது என்ற போதனையைக் கூறும் தம்மபத காதாவின் முதல் இரு அடிகளுமாவன,
(1) "நஹி வெறென வெறானி - ஸம்மந்தீத குதாசனங்"
(2) "ஸாராங்ச ஸாரதொ ஞத்வா - அஸாரங்ச அஸாரதொ"
(3) "சரங் செ நாதிகச்செய்ய - ஸெய்யங் ஸதிஸ மத்தனொ"
(4) "அக்கொச்ஜி மங் அவதி மங் - அஜினி மங் அஹாஸி மெ"

22. காமம், இம்சை, கடுங்கோபம் என்பவற்றை சங்கல்பம் கொண்டு தவிர்ப்பதனை எட்டு சீரிய மார்க்க (அடங்கிமக)த்தில் இவ்வாறு அடையாளப்படுத்துவர்,
(1) ஸம்மா திட்டி (2) ஸம்மா ஸங்கப்ப
(3) ஸம்மா கம்மந்த (4) ஸம்மா ஆஜீவ

23. "போக அபாய முக" அல்லது ஒருவர் சம்பாதித்த செல்வம் அழியும் ஆறு வாயில்களுள் **அடங்காத** விடயமாவது,
(1) களவாடல் (2) மதுபானம் அருந்துதல்
(3) சூதாட்டத்தில் ஈடுபடல் (4) கெட்ட நண்பர்களோடு உறவாடல்

24. பாவனாவில் ஈடுபட்டிருக்கும்போது உட்காருதல், நிற்றல், நடத்தல் முதலான சகல செயற்பாடுகளையும் நினைவுடனும் தெரிந்து கொண்டும் செய்தலை புத்தசமயத்தில் கூறுவது,
(1) ஆயதி ஸங்வரய (2) ஸதி ஸம்பஜஞ்ஞ
(3) ஸந்துட்டிதா (4) ஜாகரியானுயோக

25. "இபித மரே யலி இபிதே நொதிர ஸஸர ஸாகரே" எனும் பாடல் அடிகளால் விளக்கப்படுவது உயிர்கள் சம்சாரத்தில் இறந்து பிறந்து மாறிக் கொண்டிருக்கும் விதமென தெளிவாக்கிய பெண் குருவானவர் புத்தருக்கு இந்த நிலைமையைக் கண்டுகொள்ளும் அறிவுள்ளதென்றும் தெரிவித்தார். அந்த ஞானமானது இவ்வாறு அழைக்கப்படுவது,
(1) ஆஸவக்க (2) புப்பேநிவாஸானுஸ்ஸதி
(3) சுதுபபாத (4) திப்பசக்கு

26. நிபான மார்க்கத்தில் ஈடுபடல், மனதை ஒழுங்குபடுத்தல் என்பவற்றுக்குத் தடையாயுள்ள ஐந்து விடயங்கள் புத்தமதத்தில் போதிக்கப்படுவதனை இவ்வாறு அழைப்பர்,
(1) பஞ்ச நியாம தர்ம (2) பஞ்ச உபாதான
(3) பஞ்ச நீவரண (4) பஞ்ச ஸ்கந்த

27. நால்வகை கர்மங்களில் செய்யவேண்டுமென்ற உள்ள சக்தியொன்றினால் அல்லாமல் செய்யப்படும் செயலை இவ்வாறு கூறுவர்,
(1) கருக கர்ம (2) ஆஸன்ன கர்ம
(3) ஆசிண்ண கர்ம (4) கடத்தா கர்ம

28. வகுக்கப்பட்ட காலத்திற்கமைய நான்கு வகையான கர்மங்களுள் வகுத்து கொடுப்பதற்கு அவகாசம் **கிடைக்காத** கர்ம புத்தசமயத்தில் விவரிக்கப்படுவது,
(1) ஜனக கர்ம (2) திட்டதம்ம வேதனீய கர்ம
(3) உபபஜ்ஜவேதனீய கர்ம (4) அஹோஸி கர்ம

29. வலகம்பா மன்னன் தனக்கு நன்மை செய்த மகாதிஸ்ஸ தேரருக்கு அபயகிரி விகாரையைத் தனிப்பட்ட முறையில் வழங்கியமையால் இலங்கை சாசன வரலாற்றில் நிகழ்ந்த மிக முக்கியமான இலங்கை சம்பந்தப்பட்ட விடயம் **அல்லாதது,**
(1) பிக்குகள் இரு பிரிவினராகப் பிரிந்துபோனமை
(2) பிக்கு ஒருவரை சங்க சமாஜத்திலிருந்து விலக்கியமை
(3) மகா விகாரைக்கு அரச ஆதரவு கிடைக்கப் பெறாமை
(4) விநய சங்காயன ஏற்பட்டமை

30. தார்மிக இராச்சிய பரிபாலனத்திற்கான அறிவுரைகளாயமையும் விடயங்களுக்கு **உரியதல்லாதது,**
(1) ஸப்த அபரிஹானீய தர்ம (2) தஸ ஸக்விதிவத்
(3) தஸ ராஜதர்ம (4) ஸதர உபாதான

31. "ஸவெ மானுஸா மம பஜா" "சகல மனிதர்களும் எனது பிள்ளைகள்" என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தன் இராச்சியத்தை பரிபாலனம் செய்த அரசன்,
(1) பிம்பிஸார (2) அஜாஸத்த (3) கோசல (4) தர்மாசோக

[பக். 4 ஐப் பார்க்க

32. காலாம சூத்திரத்தில் ஒருவர் ஏற்றுக்கொள்ளக் கூடாதது என்று போதித்த விடயங்களுள் **அடங்காதது,**
   (1) பரம்பரையாக நிலவிவரும் நம்பிக்கையொன்றென்பதால் ஏற்றுக்கொள்ளக் கூடாது.
   (2) புனிதமான நூலில் சொல்லப்பட்டிருப்பதால் ஏற்றுக்கொள்ளக் கூடாது.
   (3) கூறியவர் தனது சிஷ்யன் என்பதால் ஏற்றுக்கொள்ளக் கூடாது.
   (4) தான் ஏற்றுக்கொண்ட கொள்கை என்பதாலும் பொருத்தமாவதாலும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

33. ஆசிரியை பௌத்த இலக்கிய பாடத்தை முடித்த பின்னர் சமூக நன்மைக்கான நல்ல உபதேசங்களை வழங்கும் நோக்குடன் எழுதப்பட்ட உபதேச இலக்கிய நூல்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடும்படி கூறினார். இவற்றில் சரியான பெயர்களாவன,
   (1) லோகோபகார, காவ்ய சேகர, கச்ஸிலுமிண
   (2) லோவட ஸங்கராவ, ஸஸதாவத, புதுகுணாங்கார
   (3) லோவடசங்கராவ, ஸிதத் ஸங்கரா, குத்தில
   (4) லோவட சங்கராவ, ஸுபாஷித, லோகோபகார

34. கோட்டை இராச்சிய காலத்து இலக்கிய கர்த்தாவான தொடகமுவ ஸ்ரீ ராகுல தேரர் காவ்யஷேகர நூலை எழுதுவதற்கு ஆதாரமாகக் கொண்ட ஜாதகக் கதையாவது,
   (1) மகாதேவ ஜாதக
   (2) ஸத்துபத்த ஜாதக
   (3) ஸஸ ஜாதக
   (4) லோமஹங்ஸ ஜாதக

35. பொலன்னறுவைக் காலத்தில் குருலுகோமி பண்டிதர் ஆக்கிய இரண்டு நூல்களாவன,
   (1) தர்ம பிரதீபிகா, அமாவதுர
   (2) அமாவதுர, ஸத்தர்ம ரத்னாவலி
   (3) தர்ம பிரதீபிகா, ஸத்தர்மாலங்கார
   (4) தம்பியா அடுவா கடபத, ஸிகவலந்த வினிஸ

36. நிற்கும் நிலை, அமர்ந்திருக்கும் நிலை, சாய்ந்த நிலை ஆகிய மூன்று நிலைகளுடனும் கூடிய சிலைகளும் காணக்கிடப்பது,
   (1) பொலன்னறுவையிலுள்ள திவங்க பிலிமாகாரத்தில்
   (2) பொலன்னறுவையிலுள்ள கல்விகாரையில்
   (3) வெல்லவாயவிலுள்ள புதுறுவகலவில்
   (4) அனுராதபுரத்திலுள்ள அபயகிரியில்

37. அனுராதபுர கல்விச் சுற்றுலா முடிந்த பின்னர் ஆசிரியர் சிங்கள சிற்பவியல் சிற்பியின் சிறப்பான கலைத் திறைமையைக் காட்டும் ஆக்கமொன்றுக்கான உதாரணத்தைக் காட்டும்படி கேட்டார். இதற்கு சரியான விடையாவது,
   (1) தூபத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வட்டதாகை
   (2) தூபராமவைச் சுற்றியுள்ள கல்தூண் வரிசை
   (3) அனுராதபுரத்தில் பிசோ மாளிகைக்கு அருகிலுள்ள சந்திரவட்டக்கல்
   (4) அனுராதபுரத்தில் அமைந்துள்ள இரட்டைக் குளம் (குட்டம் பொக்குண)

38. புத்தசமயத்தின்படி ஐந்து ஸ்கந்தங்களின் சேர்க்கையால் அமைந்தவன் மனிதன். இங்கு கூறப்பட்டுள்ள ஐந்து ஸ்கந்தங்களை இவ்வாறு அழைப்பர்,
   (1) ரூப, சப்த, கந்த, ரஸ, ஸ்பர்ஷ
   (2) ரூப, வேதனா, ஸஞ்ஞா, ஸங்கார, விஞ்ஞாண
   (3) படவி, ஆபோ, தேஜோ, வாயோ, ஆகாஸ
   (4) சக்கு, ஸொத, கான, ஜிவ்ஹா, காய

39. தர்ம போதனையில் ஈடுபட்ட பிக்குவொருவர் சமயச் சொத்தின் மூலம் பௌத்தன் வளம் பெறும் விதம் பற்றி விளக்கமளித்தார். அவரது சமய போதனைக்கு ஆதாரமாயிருந்தது,
   (1) செல்வந்தனாதல் பற்றியது
   (2) செல்வத்தைப் பயன்படுத்தல் பற்றியது
   (3) சிரத்தா பற்றியது
   (4) பாவனா பற்றியது

40. சப்த அபரிஹானிய தர்மத்துக்குரியது **அல்லாத** விடயமாவது,
   (1) எப்போதும் ஒன்றுகூடல்
   (2) ஒற்றுமையாக ஒன்றுகூடி ஒற்றுமையாகக் கலைந்து போதல்
   (3) முன்பு நிலவாத சட்டங்களை உண்டாக்குதல்
   (4) பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கல்

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2014

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

## பௌத்தம் II

* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகளும் வழங்கப்படும்.

**1.** (i) காமசுகல்லிகானுயோக, அத்தகிலமதானுயோக என்பவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

(ii) எந்த சூத்திர போதனையைக் கேட்டதனால் ஐந்து பேர் கொண்ட சந்நியாசிக் குழுவானது அரஹத் நிலையை அடைந்தது ?

(iii) "ஸப்ப பாபஸ்ஸ அகரணங் - குஸலஸ்ஸ உபஸம்பதா

ஸசித்த பரியோதபனங் - எதங் புத்தான ஸாஸனங்" இச் செய்யுளின் கருத்தினை எழுதுக.

(iv) "தானங் ஸீலங் பரிச்சாகங்" என்ற செய்யுள் என்ன விடயங்களைச் சுட்டிநிற்கின்றது ?

(v) கண்டாகார, கடாகார என்பதன் தமிழ்க் கருத்தினை எழுதுக.

(vi) "சரத பிக்கவெ சாரிகங் பஹுஜன ஹிதாய, பஹுஜன ஸுகாய" இவ்வாறு புத்தர் போதித்தது யாருக்கு ?

(vii) "புத்தரது வாழ்க்கை (பத்மாகார) தாமரை அமைப்பைப் போன்றது" இதன் கருத்தினை விபரிக்குக.

(viii) **நான்கு** வகை 'அகதி'யினைப் பெயரிடுக.

(ix) "அனவஜ்ஜஸுக" சுருக்கமாக விபரிக்குக.

(x) ஹெல அடுவா (ஸீஹலட்ட கதா) என்பது யாது ?

**2.** (i) பரிநிர்வாணம் அடைந்த சித்தார்த்தர் முதலில் உண்மையைத் தேடிச் சென்றடைந்த **இரு** ஆசாரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) பிக்குகளின் தொகுதி வளர்ந்து வந்த வகையினை விளக்குக.

(iii) புத்தரது பண்புகளிலிருந்து சிஷ்ய வாழ்வுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளக்கூடிய பண்பினை விளக்குக.

**3.** (i) சிகால கிருகபதியின் மகனுக்கு கிருகஸ்த வாழ்வு சம்பந்தமான விடயங்களை விளக்குவதாயமைந்த சூத்திர போதனை எது ?

(ii) "மாதா பிதா திஸா புப்பா" எனும் செய்யுள் விளக்குவதற்கமைவாக அன்னியோன்யமாக ஆற்ற வேண்டிய கடமைகளைக் கொண்ட **ஆறு** சமூகக் குழுக்களைக் குறிப்பிடுக.

(iii) அர்த்தமுள்ள கிருஹஸ்த வாழ்வை வாழ்வதற்கான வழிமுறையினை புத்தமதம் போதிக்கும் வகையினை விளக்குக.

**4.** (i) புகழ் வளர்ச்சிக்கு உதவும் விடயங்கள் சம்பந்தமான தம்மபத காதாவை எழுதுக.

(ii) அந்தச் செய்யுளில் குறிப்பிடப்படும் புகழ் வளர்ச்சிக்கு உதவும் சமய சம்பந்தமான விடயங்களை எழுதுக.

(iii) தனிப்பட்டவர் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு புத்திமதி கூறும் நூல் என்றவகையில் தம்மபதத்தை மதிப்பீடு செய்க.

[பக். 6 ஐப் பார்க்க

**5.** (i) "யொபடிச்சஸமுப்பாதங் பஸ்ஸதி, ஸொ தம்மங் பஸ்ஸதி" இதன் கருத்தை விளக்குக.

(ii) "அவிஜ்ஜா பச்சயா ஸங்காரா" என்பதனை சமய ரீதியில் விபரிக்குக.

(iii) சம்சார துக்கம் போன்றே சமூகத் துக்கமும் உண்டாவதும் இல்லாது போவதுமான விதத்தினை விளக்குவதற்கு காரண காரிய வாத போதனையினைத் தொடர்புபடுத்துவது பற்றி மதிப்பீடு செய்க.

**6.** (i) முதலாம், இரண்டாம் பௌத்த மகா சபைகள் நிகழ்ந்த இடங்களின் பெயர்களைத் தருக.

(ii) முதலாவது பௌத்த மகா சபை கூட்டப்பட்டதற்கான காரணங்களை விளக்குக.

(iii) பௌத்த மகா சபையின் மூலமாக சாசனத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட வகையினை விபரிக்குக.

**7.** (i) கரணீய மெத்த சூத்திரத்தில் காட்டப்பட்டுள்ளதற்கமைவாக மெத்த தியானப் பயிற்சி செய்பவரிடம் அமைந்திருக்க வேண்டிய **இரண்டு** குணவியல்புகளைப் பெயரிடுக.

(ii) 'மெத்த'வை விருத்தி செய்வது எவ்வாறு என்பதை விளக்குக.

(iii) மெத்தவை விருத்தி செய்வதன் மூலம் அமைதியான சமூகத்தை எவ்வாறு அமைக்க முடியும் என்பதை விபரிக்குக.

***

The National e-learning Portal for The General Education